பக்கங்கள்: எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (07-11-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 323

# வவுனியாவிலிருந்து வன்னி செல்ல பூவரசங்குளம் ஊடாக புதிய பாதை

## போக்குவரத்துக்கு நேற்று திறக்கப்பட்டது

வவுனியா, நவ. 7

வவுனியாவில் இருந்து வடக்கே வன்னி செல்வதற்காக பூவரசங்குளம் ஊடாக புதிய பாதை ஒன்று நேற்று போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டது.

இந்த பாதை ஊடாக சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் வாகனங்களும், அம்புலன்ஸுகளும் நேற்று அனுமதிக்கப்பட்டன.

அடுத்த சில தினங்களில் நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்லும் லொறிகளும் இப்பாதை ஊடாக அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

படையினரின் பிரதான சோதனை நிலையம் ஒன்று பூவரசங்குளத்தில் இயங்கும் என்றும் —

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் இருந்து வவுனியா செல்வோரும் —

வவுனியாவில் இருந்து வன்னிப் பகுதி செல்வோரும் பூவரசங்குளத்தில் வைத்து சோதனையிடப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து பிரதான பாதை ஊடான போக்குவரத்து தடைப்பட்டு தாண்டிக்குளம் சோதனை நிலையமும் செயல் இழந்தது தெரிந்ததே.

பிரதான பாதையில் போக்குவரத்து தடைப்பட்ட பின்னர் பெரும் சிரமங்களின் மத்தியில் உயிலங்குளம் ஊடாகவே மக்கள் வவுனியா வரக்கூடியதாக இருந்தது.

தற்போது பூவரசங்குளம் ஊடாக புதிய பாதை திறந்துவிடப்பட்டுள்ளது.

(இ-21-3)

# ஈ. பி. டி. பி. உறுப்பினர் கிரனேட்வெடித்து காயம்!

## யாழ். நகரில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 7

கிரனேட் வெடிப்பு சம்பவம் ஒன்றில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காயமடைந்தார்

யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. பணிமனையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அந்தோனி மெடிஸ்கோ (வயது 23) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஈ.பி.டி.பி. பணிமனைக்கு அருகில் இருந்த காவலரண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மோதல்

திருகோணமலை மாவட்டம் மொறவேவ பிரதேசத்தில் புலிகளுக்கும், விமானப்படையினருக்குமிடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது

இம்மோதலில் 4 புலிகள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3)

## படையினர் உட்பட 11 பேர் கைது

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் படையினருக்கு வழங்கப்பட்டிருந்த மருந்து மற்றும்பால்மா வகைகளை திருடியதாக படையினர் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருந்து வகைகள், பால்மா, மாமைட், கோடியல் ஆகியவற்றை திருடி தலாவ என்னுமிடத்தில் ஒரு கடையில் விற்றதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த 11 பேரில் இராணுவத்தினரும், ஆஸ்பத்திரி ஊழியர்களும் அடங்குவர்.

## முச்சந்தி முரளி



அப்ப கடைசியில கடற்படையினரின் தலையில விழுந்து போச்சு போல ... !

## ராஜீவ் கொலை வழக்கு பூர்த்தி

புதுடில்லி, நவ. 7

கடந்த 4 வருடங்களாக நடைபெற்று வந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் பூர்த்தியாகின.

இவ் வழக்கின் தீர்ப்பு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி வழங்கப்படும் என்று விசேட நீதிமன்ற நீதிபதி வி. நவநீதம் அறிவித்துள்ளார்.

அதேநேரம் — இக்கொலையின் பின்னணி குறித்து விசாரணை செய்துவரும் ஜெயின் குழுவின் இரகசிய விசாரணை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளத்துக்கு வடகிழக்கே 3 இடங்களில் புலிகள் தாக்கு!

## முறியடிக்கப்பட்டதாக அரச தரப்பு அறிவிப்பு

வவுனியா, நவம்பர் 7

நேற்று முன்தினம் காலை மாங்குளத்துக்கு வட கிழக்கே உள்ள படையினரின் முன்னணி காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் பெருத்த எடுப்பில் தாக்குதல்கள் நடத்தினர்.

இந்த தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டு விட்டதாகவும், 50 புலி உறுப்பினர்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காலநிலை சீராக இருந்தால் இன்றுமீண்டும்விமானசேவை

யாழ்ப்பாணம், நவ. 7

காலநிலை சீர்கேடு காரணமாக கடந்த இரு தினங்களாக (5ஆம், 6ஆம் திகதிகள்) பாதிக்கப்பட்ட கொழும்பு —பலாலி ''லயன் எயர்'' விமான சேவை காலநிலை சீரடைந்தால் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ''லயன் எயர்'' நிறுவனம் நேற்று மாலை தெரிவித்தது.

அதே நேரம்— இன்று பயணிகள் விமான சேவை நடத்தப்படும் பட்சத்தில் 5ஆம், 6ஆம் திகதிகளில் பயணம் செய்யமுடியாது போனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

(இ-3)

## 2 தினங்கள் பெய்த மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 7

கடந்த இரு தினங்களாக குடாநாட்டில் தொடர்ந்து பெய்துவரும் மழைகாரணமாக தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தாழ்ந்த பகுதிகளில் வாழ்ந்த

(8 ஆம் பாக்கம் பார்க்க)

# பலமுள்ள கடற்படை இருந்திருந்தால் யுத்தம் எப்போதோ முடிந்திருக்கும்

## சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 7

''கடந்த காலங்களில் கடற்படை பலம் வாய்ந்ததாக இருக்கவில்லை. கடற்படை பலம் வாய்ந்த படையாக உருவாக்கப்பட்டிருந்தால் இன்றைய யுத்தம் என்றோ முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கும்.

வரவுசெலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பெரும்பகுதி நிதி கடற்படையை நவீனப் படுத்துவதற்கு பயன் படுத்தப்படும்''

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று அவர் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

வரவு - செலவுத்திட்டம் குறித்து விளக்குவதற்காக இந்த செய்தியாளர் மாநாடு கூட்டப்பட்டது.

இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப நவீன ரக ஆயுதங்கள், உபகரணங்கள் கொண்டதாக கடற்படையை பலப்படுத்தப் படுவது உடனடித் தேவையாகவுள்ளது.

விடுதலைப்புலிகளுக்குகடல் வழியாகவே ஆயுதங்கள் வருகின்றன — என்றார்.

## கொழும்பில் மேலும் 4 இடங்களில் அதி உச்சப் பாதுகாப்பு பகுதிகள்

கொழும்பு, நவ. 7

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து கொழும்பு நகரைப் பாதுகாக்கும் நோக்குடன் மேலும் 4 இடங்கள் அதிஉச்சப் பாதுகாப்புப் பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட உள்ளன.

பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவை எந்தப் பகுதிகள் என்று கூறமுடியாதுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-164-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜிகணேசன் இலங்கை வருகிறார்

நடிகர்திலகம் சிவாஜிகணேசன் எதிர்வரும் 14 ஆம் திகதி இலங்கை வருகிறார்.

கொழும்பில் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தங்கியிருக்கும் சிவாஜிகணேசன் முக்கிய பல வைபவங்களில் பங்கு பற்றுவார்.

வெள்ளவத்தை மயூராபதியில் 2 கோடி 70 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள ஐந்து மாடிகளைக் கொண்ட மயூராபதி இந்து கலாசார மண்டபத்தை அவர் 15 ஆம் திகதி திறந்து வைப்பார். (இ-3)

---

**தூரிகை நுண்கலை வளாகம்**
நல்லூர்

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று 07 - 11 - 97 ஆரம்பமாகவிருந்த மனைப் பொருளியல் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது.

நிர்வாகி.

(51009)

---

யா/சுதுமலை
சிந்மய பாரதி வித்தியாலயம்
மானிப்பாய்

## பரிசளிப்பு விழா 1995/96

காலம்: 07-11-1997 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 1.00 மணி

இடம்: வித்தியாலய மண்டபம்

தலைவர்: திரு. செ. குபேரநாதன் (அதிபர்)

பிரதம விருந்தினர்:

**திரு. சி. சிவராசா** அவர்கள்
(கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் கல்வி வலயம் - 02)

சிறப்பு விருந்தினர்;

**திருமதி றெ. இருதயநாதன்** அவர்கள்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள்


மேற்படி விழா சிறப்புற அமைய வாழ்த்துவோர்
**ஸ்ரீ சுபா போக் ஹவுஸ்**
சுதுமலை (49836)

---

31-ஆம் நாள்

## நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணில் 19 — 02 — 1934



விண்ணில் 09 — 10 — 1997

அமரர்

**செல்லத்துரை செல்வராஜா**

(இளைப்பாறிய பொதுமுகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை.)

பருத்தி நகரின் மாமனிதனாய்
கூட்டுறவின் முன்னேற்றத்திக்கு வழி காட்டியாய்
பண்பின் இருப்பிடமாய் அன்பின் பிறப்பிடமாய்
நேர்மையின் சிகரமாய் கடமையே கண்ணாய்
குடும்பத்தின் ஒளியாய் நானிலம் போற்ற வாழ்ந்த
தலைவா!
இன்று எம்மை எல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி
சேர்ந்த விந்தையென்னவோ?

எமது அன்புத் தெய்வத்தின் மறைவையொட்டி மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (8-11-97) சனிக்கிழமை காலை 7-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

நாச்சிமார் கோயில் ஒழுங்கை,
2-ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(சி/1983)

---

## மூடப்பட்டுள்ளது

நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் 15 ஆம் இலக்கக் கிளையான இராஜ பாதை கிராம விஸ்தரிப்பு திட்டக்கிளை பாதுகாப்புக் காரணங்களினால் மூடப்பட்ட நிலையில் உள்ளது.

இப்பகுதி பாவனையாளர்கள் தங்கள் உலர் உணவு நிவாரண பொருள்களையும், நுகர்ச்சிப் பொருள்களையும் பெறுவதற்கு கல்வியங்காடு கிளையிலும், திருநெல்வேலி கிளையிலும் ஏற்பாடு செய் செய்யப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி தெரிவித்தார். (ஐ-135)

---

## சிங்களம்

எழுத, வாசிக்க, பேச
விருப்பமா?

சிங்களம் - பிரிவு II
ஆரம்பம்.

**08-11-97** சனிக்கிழமை
பிற்பகல் 2-00 மணி
(சனி, ஞாயிறு 2-00 மணி)

ஆசிரியர்: **K.R. ஸ்ரீ**

**D. M. I.**
233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

D. Sam

(51015)

---

## தேவை

எமது நிலையத்திற்கு எழுதுனர் பதவிக்கு ஒருவர் தேவை. 08-11-97 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நேரில் வரவும்.

**தூரிகை,**
**சட்டநாதர் வீதி,**
**நல்லூர்.**

(51010)

---

# இந்து சமூக கலாசார பேரவை கொழும்பில் அங்குரார்ப்பணம்!

கொழும்பு, நவ. 7

இலங்கை இந்து சமூக கலாசாரப் பேரவை என்னும் புதிய அமைப்பு ஒன்று உத்தியோக பூர்வமாக அண்மையில் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாத நடுப்பகுதியில் கொழும்பில் புலவர் அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே இவ் அமைப்பு நிறுவுவது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள இந்து சமய நிறுவனங்களுடன் இணைந்த செயற்பாட்டை மேற்கொள்ளும் வகையிலும், நவீன உலகின் முன்னேற்றத்திற்கேற்ப வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்குடனும் இவ் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக சபை, காப்பாளர் சபை, ஆளுநர் சபை எனும் சபைகளைக் கொண்ட இவ் அமைப்பின் ஆளுநர் சபையில் சுவாமிஜி தந்திரதேவா (திருகோணமலை), சுவாமி கடம்பகணனந்ததாஸ் (கண்டி), ஸ்ரீமத் க. கணபதிப்பிள்ளை (மெய்கண்டான் ஆதீனம்), சிவத்திரு ஏ. கே. சிவஞானம் (சீக்கன் ரவல்ஸ்), பொ. பாலேந்திரன் (பணிப்பாளர் பாலேந்திரா நிதியம்) ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இலங்கை இந்து சமூக கலாசாரப் பேரவையின் தலைவராக புலவர் அ. திருநாவுக்கரசுவும், செயலாளராக சி. க. ஜெயபாலரட்ணமும், பொருளாளராக சிவத்திரு இ. கதிரவேலுவும் (நாடாளுமன்றம்) நிர்வாக சபை உறுப்பினர்களாக மேலும் பதினைந்து பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-ரீ)

---

## மரண அறிவித்தல்

### திருமதி கைலாயபிள்ளை கமலம்

திருமதி கைலாயபிள்ளை கமலம் 6-11-97 காலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கைலாயபிள்ளையின் அன்பு மனைவியும், அருமைத்துரை (சுகுணன்), ஜெகதீஸ்வரன் (காந்தி), உதயகுமார் (U.K.), நவரத்தினம் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலா, ஜீவா, உதயகுமாரி (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (7-11-97) பகல் 12-00 மணிக்கு நீர்வேலி வடக்கு, மாசுவனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சுகுணன், காந்தி
(மகன்மார்)

நீர்வேலி வடக்கு,
மாசுவன்.

(51013)

---

**யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி**

பொருள்களை ஏற்றிச் [காவிச்] செல்வதற்கான

## கேள்வி கோரல் - 1997

பதிவு செய்யப்பட்ட போக்குவரத்துப் பாரஊர்திச் சங்கங்கள், பதிவுசெய்யப்பட்ட போக்குவரத்துப் பாரஊர்தி முகவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட நபர்கள் ஆகியோரிடமிருந்து பின்வரும் இடங்களுக்கு அத்தியாவசிய சேவை ஆணையாளரினால் / உணவு ஆணையாளரினால் / கூட்டுத்தாபனங்களினால் / அரசசார்பற்ற நிறுவனங்களால் / தனியாரினால் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப்படும் பொருள்களை எடுத்துச் செல்வதற்குரிய கேள்வி கோரப்படுகின்றது. இக் கேள்வி விண்ணப்பத்தினை மீளளிக்கப்படாத பணமாக ரூபா. 100/- ஐச் செலுத்தி 22 - 11 - 1997 ஆம் திகதி வரை பெற்று மேற்படி அலுவலகத்தில் உள்ள பெட்டியில் இடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. லொறிகளுக்குரிய கேள்வி கோரல்:

| | இருந்து | வரை | [ஒருவழிப்பாதை] கிலோ மீற்றர் |
|---|---|---|---|
| 1 | காங்கேசன்துறை துறைமுகம் | காங்கேசன்துறை களஞ்சியம் | 1.5 |
| 2 | காங்கேசன்துறை களஞ்சியம் | யாழ்ப்பாண களஞ்சியம் | 22.0 |
| 3. | பருத்தித்துறை துறைமுகம் | மந்திகை களஞ்சியம் | 3.5 |
| 4. | பருத்தித்துறை துறைமுகம் | யாழ்ப்பாணம் | 35.0 |

2. ஒரு வான் மட்டும் லொறி அணியுடன் போய் வருவதற்கான கேள்வி கோரல் [வேறான கேள்விப்பத்திரம் வழங்கப்படும்] யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை களஞ்சியம் 22.0

**நிபந்தனைகள்:**

1. ஒப்பந்தகாரர் எம்மால் கேள்விப்பத்திரத்துடன் தரப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தைப்பெற வரும்போது பின்வருவனவற்றைக் கொண்டு வரவேண்டும்.
   அ) வாகனப் பதிவுச் சான்றிதழ் அல்லது உடமைமாற்ற ஆவணங்கள் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு [வாகனச் சொந்தக்காரர் என நிரூபிப்பதன் பொருட்டு]
   ஆ) வாகன வரிப்பத்திரம்
   இ) செல்லுபடியான காப்புறுதிப்பத்திரம்
3. ஒப்பந்தம் செய்யும்போது பிணைப்பணம் ரூபா 10,000/- கட்டப்படல் வேண்டும்.
4. கேள்வியில் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

01-12-1997 இல் இருந்து புதிய கேள்வி நடைமுறைப்படுத்தப்படும்.

**க. சண்முகநாதன்**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

[சி/1981]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானாவின் காருடன் மோதிய

# மர்ம "பியட்" காரைத் தேடி பாரிஸ் பொலீஸ் வேட்டை

பாரிஸ், நவ. 7

இளவரசி டயானாவின் காருடன் மோதியதாகச்சந்தேகிக்கப்படும் வெள்ளை நிற பியட் காரின் உரிமையாளரைக் கண்டு பிடிப்பதற்காகப் பிரெஞ்சுப் பொலீஸார் பரந்த அளவிலான தேடுதல் நடவடிக்கையைத் தொடக்கியுள்ளனர்.

இந்த தேடுதல் நடவடிக்கையின் ஒரு பகுதியாக 1983 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாரிஸ் நகரில் பதிவு செய்யப்பட்ட 40 ஆயிரம் வெள்ளை நிற பியட் கார்களின் உரிமையாளர்கள் உள்ளூர் பொலீஸ் நிலையங்களுக்குத் தனித் தனியே அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

மேற்படி மர்மக் கார் பற்றிய தடயங்கள் பாரிஸ் நகர எல்லைக்குள் கண்டு பிடிக்கப்படாமல் போனால் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இந் நடவடிக்கையை விஸ்தரிக்க பொலீஸார் உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அதிபர் சதாம் ஹுசேய்னுக்கு துப்பாக்கி அன்பளிப்பு

அதிபர் சதாம் ஹுசேய்ன் ஈராக்கில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் அமோக வெற்றியீட்டிய தன் இரண்டாம் ஆண்டு நினைவு விழாக் கொண்டாட்டங்கள் கடந்த வார இறுதியில் ஈராக்கில் நடைபெற்றன.

இந்தவெற்றியின் ஞாபகார்த்தமாக அதிபர் சதாம் ஹுசேய்னுக்கு துப்பாக்கி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதனை அவர் இயக்கிப் பார்த்தார்.

ஐ. நா. ஆயுத பரிசோதனைக் குழுவில் அமெரிக்கர்கள் இடம் பெறக் கூடாது என அதிபர் ஹுசேய்ன் வலியுறுத்திவருவது தெரிந்ததே.

# அதிபர் சுஹார்ட்டோவின் மகனின் வங்கிக்கு மூடுவிழா

## அதனை ஆட்சேபித்து வழக்கு

ஜகார்த்தா, நவ. 7

இந்தோனேசியாவில் அதிபர் சுஹார்ட்டோவின் புதல்வர் பங்கு வகிக்கும் வங்கி ஒன்று மூடப்பட்டதை ஆட்சேபித்து நிதி அமைச்சர் மீதும், மத்திய வங்கி ஆளுநர் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சுஹார்ட்டோவின் புதல்வர் தொடுத்திருக்கும் இந்த வழக்கு அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள தருணத்தில் அதிபர் சுஹார்ட்டோவின் குடும்பத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் அரசியல் காரணங்களுக்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுஹார்ட்டோவின் புதல்வர் தெரிவித்துள்ளார்.

# கியூபா மீதான தடைகளை அமுல் செய்ய வேண்டாம்

## உறுப்பு நாடுகளிடம் ஐ. நா. கோரிக்கை

நியூயோர்க், நவ. 7

கியூபா மீது 30 ஆண்டுகளுக்கு முன் விதிக்கப்பட்ட வர்த்தகத் தடைகள் உட்பட அமெரிக்கா விதித்துள்ள எல்லாத் தடைகளையும்அமுல் செய்ய வேண்டாம் என்று உறுப்பு நாடுகளிடம் ஐ. நா. சபை கோரியுள்ளது.

இது தொடர்பான வாக்கெடுப்பு ஒன்று தேசிய சபையில் இடம்பெற்றது. 185 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபையில் 143 நாடுகள் அதற்கு ஆதரவாகவும், 3 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 17 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

அமெரிக்கா, இஸ்ரேல், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளே எதிர்த்து வாக்களித்தன.

அமெரிக்கா உத்தரவிட்டுள்ள நடவடிக்கைகளையும், சட்டங்களையும் பயன்படுத்திக் கொள்ளாமல் அதில் இருந்து விலகி இருக்குமாறு ஐ நா. உறுப்பு நாடுகளை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக நேற்று முன்தினம் இரவு இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. (ஐ)

உலக அரங்கில்

# லெனினின் சிலை இன்று ஏலத்தில்!

மொஸ்கோ, நவ.7

முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்ற பால்டிக் குடியரசில் உள்ள எஸ்டோனியன் நகரை அலங்கரித்து நிற்கும் லெனினின் சிலை இன்று ஏலம் விடப்படவுள்ளது.

மாபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் லெனின் 1917 ஆம் ஆண்டு போல்சிவிக் கட்சியை உருவாக்கினார். அதன் மூலம் சோவியத் குடியரசு உதயமானது. கட்டுக் கோப்புடன் விளங்கி வந்த சோவியத் யூனியன் 1991 இல் பல நாடுகளாகப் பிளவுபட்டது.

அதன் பின்னர் பல இடங்களிலும் லெனினின் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. மொஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தை மூடிவிட்டு அங்கு பாதுகாக்கப்பட்டு வரும் லெனினின் உடலை எரித்துவிட முயற்சிகள் நடந்தன. ஆனால் அது இன்னும் செயற்பாட்டிற்கு வரவில்லை.

போல்சிவிக் கட்சி தோன்றிய 80 ஆவது ஆண்டை முன்னிட்டு எஸ்டோனியன் நகரில் உள்ள இந்த லெனினின் சிலையை இன்று ஏலத்தில் விட நகர நிர்வாகம் தீர்மானித்துள்ளது. (ஐ)

# மணவறையில் மணமகளை கண்டு "மயங்கிய" மணமகன்

## எகிப்திய தலைநகரில் சம்பவம்

கெய்ரோ, நவ. 7

திருமண தினத்தன்று தனது மணமகளின் முகத்திரையை விலக்கிப் பார்த்த இளம் எகிப்திய மணமகனொருவர் மயங்கி வீழ்ந்தார். தன் காதலியைத் திருமணம் செய்யப்போவதாக எதிர்பார்த்திருந்தவர் இன்னொருத்தியை மணம் புரிந்ததைத் தெரிந்ததுமே மயங்கி வீழ்ந்தார். 'அல் அக்பர்'' என்ற எகிப்திய தினசரி கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் செய்தியை வெளியிட்டிருந்தது.

கெய்ரோவின் சுற்றுப்புறப் பகுதியான இசாவில் வாழும் இந்தச் சாரதி 18 வயதான தனது காதலியைத் திருமணம் செய்ய உத்தேசித்திருந்தார். நண்பரொருவர் மூலம் அறிமுகமான இந்த இளம் பெண் மீது காதல் கொண்ட அந்த மணமகன் தனது காதலியின் பெற்றோரின் சம்மதத்தைப் பெற்று திருமணத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

தனது காதலிக்கு நகைகளும் வாங்கி வழங்கிய அவர் திருமண மேடையில் மணமகளின் முகத்திரையை விலக்கியபோது அதிர்ந்தே போனார். 45 வயதான அழகற்ற பெண்ணொருத்தியைக் கண்டு மயங்கி வீழ்ந்தார். மயக்கம் தெளிந்ததும் தனது மாமனும் மாமியும் தன்னை ஏமாற்றிவிட்டார்களென்று ஓடிச் சென்று பொலீசில் புகார் தெரிவித்தார். (ஐ)

# பெண்ணுக்கு உதவப் போய் பொருள் இழந்த ஆசிரியர்!

## பஸ் பயணத்தின் போது சம்பவம்

யாழ். — பருத்தித்துறை பஸ்ஸில் பயணஞ்செய்த தொண்டர் ஆசிரியர் ஒருவர் பெறுமதிமிக்க பொருள்கள் அடங்கிய பொதியை யுவதியிடம் பறிகொடுத்தார்.

அச்சுவேலியைச் சேர்ந்த அந்த ஆசிரியர் யாழ்நகர் சென்று தனக்குத் தேவையான காலணி உட்பட வேறு பொருள்களையும் வாங்கிக்கொண்டு பிற்பகல் யாழ். — பருத்தித்துறை பஸ்ஸில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த ஆசிரியரிடம் நோயாளி போல பாவனை செய்த யுவதி ஒருவர் இருப்பதற்கு ஆசனத்தைத் தருமாறு கேட்டாள். பெண் என்றால் பேயும் இரங்கும். ஆசிரியரும் மனம் இரங்கி ஆசனத்தில் இருந்து எழுந்து இடம்கொடுத்தார். அந்த யுவதியும் வெகு நாகரிகமாக ஆசிரியரின் பொதியையும் வாங்கி வைத்திருந்தார்.

பஸ் அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. ஒருவருக்கு இடங்கொடுத்த திருப்தியில் அந்த தொண்டர் ஆசிரியரும் நின்றுகொண்டே பயணஞ் செய்தார்.

அச்சுவேலி வரை சென்று இறங்குவதற்காகப் பார்த்த போது அங்கு அந்த இடத்தில் யுவதியும் இல்லை, அவர் வாங்கி வைத்திருந்த பொதியும் இல்லை.

அந்த யுவதி கோப்பாயிலேயே இறங்கிச் சென்றுவிட்டதாக பஸ்ஸில் இருந்த பயணிகள் மத்தியில் பேச்சடிபட்டது.

ஏமாற்றத்துடன் பஸ்ஸில் இருந்து இறங்கினார் அந்த ஆசிரியர். (ஐ-11)

# வீதி திருத்த வேலைகள் மழையால் இடைநிறுத்தம்

மழைகாலம் ஆரம்பித்து விட்டதனால் பெருந்தெருக்களைச் செப்பனிடும் பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வீதிகள் புனரமைப்பிற்கென தார் பரல்களும், புல்டோசர் ஒன்றும் கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன. அவற்றை ஜனவரி மாத முற்பகுதியிலேயே பயன்படுத்தக் கூடியதாக இருக்குமெனவும் அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-ரீ)

# மழைவீழ்ச்சியை அளவிட கருவிகள் விவசாயப்பகுதியினரிடம் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 7

குடா நாட்டில் மழை வீழ்ச்சி பற்றிய தரவுகளைப் பெறுவதற்கு விவசாயப் பகுதியினரிடம் உரிய கருவிகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பெய்து வரும் மழைவீழ்ச்சி தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக நேற்று திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திற்கும், விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கும் சென்று விசாரித்த போது அங்கிருந்து மழை வீழ்ச்சி பற்றிய தரவுகளைப்பெற முடியவில்லை.

கடந்த காலங்களில் இடம் பெற்ற இடப்பெயர்வுகளின் போது பெறுமதியான விவசாய உபகரணங்கள் பல காணாமற் போய் விட்டதாக மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழை வீழ்ச்சி பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்ற வேளையில் அங்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கான அடிப்படை உபகரணங்கள் எதுவுமில்லையென்றும் இடப்பெயர்வின் போது அங்கிருந்த ஆய்வு கூடப் பொருள்கள் யாவும் களவு போய் விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து உபகரணங்களைப் பெற முயற்சி எடுக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-ரீ)

## கலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் கலைப்போட்டிகளை நடத்தவுள்ளது.

பேச்சு, கட்டுரை, கவிதை, பொது அறிவு ஆகிய போட்டிகள் மூன்று பிரிவுகளில் நடைபெறும்.

கரபந்தாட்டம், தாச்சி, கிரிக்கெற் ஆகிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை சமாச அலுவலகத்தில் அல்லது வலயப் பிரதிநிதிகளிடம் பெற்று நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நிதி உதவி

நெடுந்தீவு, நவ. 7

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு றோணியோ, தட்டச்சு இயந்திரங்கள் கொள்வனவுக்கென ஒரு லட்சம் ரூபாவும்—

நெடுந்தீவு மத்தி சனசமூக நிலையக் கட்டடத் திருத்த வேலைகளுக்கென 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மக்களுடனான சந்திப்பின் போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார். (ஐ-111)

## கூ. சங்கம் பழமரச் செய்கை

திருநெல்வேலி. நவ. 7

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விவசாயப் பண்ணையில் சுமார் ஓர் ஏக்கர் காணியில் வாழை, தேசி ஆகியன செய்கை பண்ணப்பட்டுள்ளன.

பழமரச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் இச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை மேற்படி விவசாயப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை சேமித்து வைத்து தற்போது விதை வெங்காயமாக சங்கம் விநியோகித்து வருகிறது. (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இரத்மலானை சம்பவம்:

# சந்தேக நபரின் மரணம் குறித்து விசாரணை நடத்த வேண்டும்

## மட்டக்களப்பு எம். பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

மட்டக்களப்பு, நவ. 7

இரத்மலானை விமானத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதான சந்தேக நபரான சீவரத்தினம் சிவராஜா என்பவர் மர்மமான முறையில் மரணம் அடைந்திருப்பதாகவும்—

இவரின் மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும்—மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் அவசர 'பக்ஸ்' ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார்.

சீவரத்தினம் சிவராஜா கடந்த 4ஆம் திகதி வவுனியாசின்னப் புதுக்குளத்தில் வைத்து மகனுடன் கைது செய்யப்பட்டார்.

கல்கிஸை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் 30 ஆம் திகதி களுபோவிலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் மரணமானார்.

'பொலீஸாரின் மனிதத்தன்மையற்ற சித்திர வதை, தாக்குதல்களினால் இம் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என கருதப்படுகின்றது. பாதுகாப்பு தரப்பினரால் தடுத்து வைக்கப்படும் போது தமிழர்கள் மரணம் அடைவது இது முதல் தடவை அல்ல.

பக்கச்சார்பற்றவிசாரணை ஒன்று இம்மரணம் தொடர்பாக நடை பெறவேண்டும்.

இவ்வாறு அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (இ-21)

## பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் இடமாற்றம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவில் பணியாற்றி வந்த சுமார் 5 சாரதிகளும், நடத்துனர்களும் யாழ். டிப்போவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை டிப்போவில் தேவைக்கு அதிகமாக சாரதிகளும், நடத்துனர்களும் கடமையாற்றுவதாலேயே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-173)

## மந்திகை ஆஸ்பத்திரியில் ஈ. சீ. ஜி. கருவி பழுது

மந்திகை மருத்துவமனையில் உள்ள ஈ. சீ. ஜி. கருவி நீண்ட காலமாக செயலற்றிருக்கின்றது. இதனால் இங்கு இதய நோய்ச்சிகிச்சை மேற்கொள்ள முடியாத நிலையில் பல நோயாளிகள் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

சுகாதாரத் திணைக்களம் வழங்கிய இக்கருவி கடந்த வருடம் செயலிழந்திருந்து பின்னர் சுகாதாரத் திணைக்கள நுண்ணியல் பிரிவு பொறியியலாளர்களினால் திருத்தி அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால், இங்குள்ள தொழில் நுட்பவியலாளர் அதை இயக்கிய போது, அது செயற்படவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-109)

### அம்பன் மத்திய மருந்தகத்திற்கு

## மண்எண்ணெய், விளக்குடன் பிரசவத்திற்குசெல்லும்பெண்கள்

வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்திற்கு மண்எண்ணெய் வழங்கப்படாததால் அங்கு பிரசவத்திற்காகச் செல்லும் தாய்மார் தாம் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்களுடன் மண்எண்ணெய், விளக்கு என்பவற்றையும் எடுத்துச் செல்கின்றனர்.

இங்கு கடமைபுரியும் டாக்டர் பாதுகாப்பு அரணுக்கு உள்ளே வசிப்பதால் நேர காலத்துடனேயே வீடுதிரும்பி விடுவதாகவும்—

இதனால் இரவு நேரத்தில் பிரசவத்துக்காக அங்கு செல்வோர் அயலில் உள்ள தாதி ஒருவரின் வீட்டுக்குச் சென்று அவரை அழைத்துவர வேண்டியுள்ளதாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம் மருத்துவ மனையில் டாக்டர்கள், தாதிமார் தங்குவதற்கு தங்குமிட விடுதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. (ஐ-36)

## சாவகச்சேரி லயன்ஸ் கழக நலவாழ்வுத் திட்டங்கள்

தென்மராட்சி, நவ. 7

லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் வி. தில்லைநாதனின் உத்தியோகபூர்வ விஜயத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ். கழகத்தினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நலத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் கழக அலுவலகத்தில் நடைபெறும் வரவேற்பு விழாவில் வன்னிப் பகுதியிலிருந்து தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ள தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 60 குடும்பங்களுக்கு சமையற் பாத்திரங்கள் வழங்கப்படும்.

குடும்ப உழைப்பாளரை இழந்த 20 பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

கழகத்தினால் நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும் என கழகச் செயலாளர் தெரிவித்தார். (ஐ-117)

### கையிருப்பு முடிந்ததால்

## மலத்தியோன் விசிறும் பணி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

அரியாலை, நவ. 7

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் மலத்தியோன் விசிறும் பணியை மட்டுப்படுத்தியுள்ளனர்.

மலத்தியோனின் கையிருப்பு முடியும் தறுவாயில் இருப்பதால் மலத்தியோன் விசிறும் பணி மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நுளம்பு அதிகமாக இருக்கும் குடியிருப்புப் பகுதிகளிலேயே மலத்தியோன் விசிறப்பட்டு வருவதாகவும், கொழும்பில் இருந்து மலத்தியோன் போதியளவு வந்ததும் இப்பணி விரிவுபடுத்தப்படும் என்றும் மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-17)

## வீதிகளைத் திருத்த தார்

சாவகச்சேரி, நவ. 7

சாவகச்சேரி நகரசபை அதன் எல்லைக்குட்பட்ட சேதமான வீதிகளைச் செப்பனிடவுள்ளது. இதற்காக ஒரு தொகுதி தார் பரல்கள் சபைக்கு வந்து சேர்ந்துள்ளன.

முதற்கட்டமாக நகரை அண்மித்துள்ள இராமலிங்கம் வீதி, கந்தையாவீதி ஆகிய வீதிகள் செப்பனிடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-31)

## அகண்ட இறை நாம பஜனை

யாழ்ப்பாணம், நவ. 7

திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் நடத்தும் அகில உலக அகண்ட இறைநாம பஜனை மேற்படி நிலைய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும்.

இதேவேளை 137சர்வதேச நாடுகளிலுள்ள 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாயி சேவா நிலையங்களில் நாளை சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணி வரையான 24 மணித்தியாலங்களுக்கு தொடர்ச்சியான இறைநாம பஜனை நிகழ்த்துவதற்கு புட்டபத்தி பிரசாந்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-4)

## வலி. வடக்கில் மரம் தறிக்கத்தடை

யாழ்ப்பாணம், நவ. 7

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் அண்மையில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் அனுமதியின்றி மரம் தறித்தல், மரம் கொண்டு செல்லல் ஆகியன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

மேலும் சேதமடைந்த, மற்றும் குடியிராத வீடுகளில் இருந்து கட்டடப்பொருள்கள் உலோகவகைகள் ஆகியவற்றைக் எடுத்துக் கொண்டு செல்வதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு கிராம அலுவலர்களுக்குப் பிரதேச செயலரால் பணிக்கப்பட்டுள்ளது. (இ)

உ

# வெள்ளி விழா
## சிறப்புற வாழ்த்துகின்றோம்

சைவ சமயத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கொண்ட

**அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையின்**

**வெள்ளி விழா 13 - 11 - 97 அன்று**

சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

★ மணப்பந்தல் சேவை ★ வீடியோ படப்பிடிப்பு
★ கறுப்பு, — வெள்ளை, கலர் படப்பிடிப்பு
★ பாடல்கள் பதிவு செய்தல்

முதலியவற்றிற்கு நாட வேண்டிய இடம்:

**சாயி வீடியோ அன் ஸ்ரூடியோ**

அச்சுவேலி

[சி/1978]

## பனம் விதைகள் நாட்டும் வைபவம்

வடமராட்சி பனை மரக்காலை உரிமையாளர் - தொழிலாளர் சங்கத்தினால் கடந்த **03 - 11 - 97** அன்று ஐந்நூறு ( 500 ) பனம் விதைகள் சந்தாதோட்டம் லக்ணாவத்தை என்ற காணியில் நாட்டப்பட்டன.

ஷெ வைபவம் புலோலி வடகிழக்கு கிராம சேவையாளர் திரு. புலேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் புலோலி கிழக்கு அ. த. க. பாடசாலை அதிபர் திரு. ஆ. மகேசு, அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. சு. மரியதாஸ், திரு. உதயமோகன் ஆசிரியர் ஆகியோருடன் ஷெ சங்கத்தின் செயலாளர் திரு. சூ. அந்தோனிப்பிள்ளை அவர்களும், சங்கத்தின் தொழிலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

– செயலாளர்

[சி/1979]

## BIRTHDAY REMEMBRANCE

**MISS DHARSHINI SARVANANDA**

BORN: 07 - 11 - 1972 DEPARTED: 17 - 12 - 1991

Safe in the Arms of God
Fondly Remembered on her 25th Birthday.

BY:
Appah, Ammah & Thamby.

Dr. N. Sarvananda,
Urelu East,
Chunnakam. (C/1953)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவியான

**செல்வி தவனேஸ்வரி தங்கவடிவேல்**

அவர்களின் தாயார்

**திருமதி தங்கவடிவேல்**

அவர்கள் வவுனியாவில் காலமானார். இதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வருட மாணவர்கள்,
[94/95] கலைப்பீடம்,
[51011] யாழ். பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது பாடசாலை மாணவன்

**குலசேகரம் ஜெகனும்,**

பேரன் **கனகரத்தினமும்**

**4-11-97** இல் அகாலமரணமடைந்தனர்.

இவர்களது பிரிவால் துயர் அடையும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை, தெரிவிப்பதுடன் எமது அஞ்சலிகளையும் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.

நுணாவில் மேற்கு,
அ.த.க. பாடசாலை,
சாவகச்சேரி. (51012)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கங்களின்

# கணக்குப் பரிசோதனைக்கு உதவ 50 பயிற்சியாளர்கள் தெரிவாவர்

திருநெல்வேலி நவ. 7

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு உதவியாகச் செயற்படுவதற்கு வர்த்தக பாடத்தில் உயர் தராதரம் பெற்ற 50 பயிற்சியாளர்களைத் தெரிவு செய்து பயிற்சியளிப்பதற்கு யாழ். கூட்டுறவு சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

திருகோணமலையிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளரை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் சென்ற குழுவினர் நேரில் சந்தித்தனர்.

அச்சமயம் யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பற்றாக்குறையினால் கூட்டுறவுச் சங்கங்களில் கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக எண் பார்வை செய்யப்பட முடியாத நிலை நிலவுவதை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்தே எண் பார்வையை மேற்கொள்ள கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு உதவியாக 50 பேரைத் தெரிவு செய்து அவர்களைப் பயிற்றுவித்து சேவையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் வழங்கியுள்ளார்.

இதற்கு ஆரம்ப நிதி உதவியாக 25 ஆயிரம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளார். இதனை அடுத்து விரைவில் யாழ். கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் மேற்படி பயிற்சி ஆரம்பிக்கப்படவிருப்பதாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவரும், நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவருமான பெ. கனகசபாபதி தெரிவித்தார்.

பயிற்சியாளர்களுக்கான கொடுப்பனவுப் படியை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் வழங்க முன் வந்திருப்பதாகவும், இப் பயிற்சித் திட்டத்திற்குப் பொறுப்பாக ஒய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ். முருகையா நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## கல்வியங்காடு சந்தைக்குள் தேங்கி நிற்கும் வெள்ளம்

### பாவனையாளர்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், நவ. 7

கல்வியங்காடு பொதுச் சந்தையில் தேங்கியுள்ள மழை வெள்ளத்தினாலும் இலையான் தொல்லையாலும் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மீன் சந்தைப்பகுதியிலேயே இலையான்களின் தொல்லை அதிகரித்துள்ளது. கடந்த தீபாவளி தினத்தன்று அப்பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழிகளின் தலைகள், இறகுகள் முதலியன நிலத்தில் புதைக்கப்படாது வெளியே வீசப்பட்டிருந்தன.

தெரு நாய்கள் அவற்றை வீதிகளில் கொண்டு திரிந்தன.

சந்தையின் அருகேயுள்ள வீதிகள் கட்டட இடிபாடுகளினால் நிரப்பப்பட்டுள்ளதால் அயற் பிரதேசத்தில் உள்ள வெள்ள நீர் சந்தைக்குள்ளேயே தேங்கி நிற்கின்றது.

(ஐ-ரீ)

## ராகிங் கொலைக்கொடுமை; யாழ்ப்பாணத்து உணர்வலை

## எந்தத் தாய் தாங்குவாள்?

நவாலியைச் சேர்ந்த தாய், "நவாலியூர் நாயகி" வரப்பிரகாஷ் இறந்த செய்தி கேட்டதும் தாம் இந்தக் கவிதையை அழுதழுது எழுதியதாகச் சொல்கிறார்!

பகிடிவதைக்குச் சாவுமணி அடியுங்கள்!
பல்கலைக்கழகங்கள் இன்னும் ஏன் தாமதம்?
பகிடியோ வாழ்க்கை? பகிடியோ மனித உயிர்?
பகிடியோ உங்கள் படிப்பும் பட்டமும்?
மகுடி ஊதுகின்ற நண்பர்கள் துணையோடு
பகிடிவதை செய்த பயங்கரந் தன்னில்
பலிக்கடாவான பொறியியல் மாணவன்
வரப்பிரகாஷ் செய்த பாவந்தான் என்ன?
பல்கலைக்கழகங்கள் கொல்கலைக்கழகமாக
மாறுகின்ற கொடுமையைப் பாருங்கள், வேந்தர்காள்!
சட்டம் கொண்டு வந்து கொட்டம் அடக்குங்கள்;
குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்துங்கள்!
குண்டுச்சத்தங்கள் காதில் விழுந்தாலும்
குப்பி விளக்கொளியில் கோடி பாடங்கள்
குனிந்திருந்தே முதுகு கூனும்வரை படித்து
தப்பிப்பிழைத்துத் தரப்படுத்தலுக் கப்பால்
தாண்டி வந்து பல்கலைக்கழகத்தில் கால்பதித்து
எப்போது மகன் வருவான் என்று பெற்றோர்
காத்திருக்கையில்
"குப்பாடித்தனம்" செய்த பகிடிவதையால் பிள்ளை
இறந்து விட்டான் என்று இழவுச் சேதி வந்தால்
எந்தத் தாய் தாங்குவாள்? எப்படித் தாங்குவாள்?
அந்தத் தாய் மனநிலையில் எனை வைத்துப் பார்த்த போது
எழுந்த இந்தக் குமுறல் தான் எழுத்தாய் கவிதையாய்
கண்ணீராய் எந்தன் கன்னத்தில் வழிந்தோட
எண்ணத்தில் 'பகிடிவதை' இதயத்தை அழுத்துவதை
இன்னமும் உணர்கின்றேன்; எண்ணிஎண்ணி அழுகின்றேன்.

## பல்கலை. செல்ல முன்னரே 'ராகிங்' ஆரம்பமாகி விடுகிறது!

நீர்வேலியைச் சேர்ந்த ந. சேதுகாவலர் என்ற வாசகர் 'ராகிங்' குறித்த பல பின்னணித் தகவல்களை இங்கே முன் வைக்கிறார்:

பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேரும் மாணவனுடைய கூச்சத்தைப் போக்குவதற்காகவே பகிடிவதை (ராகிங்) என்பது எந்த விதத்திலும் பொருந்தக்கூடிய நியாயம் அல்ல. புதிதாகச் சேரும் மாணவனின் மனத்தில் கூச்சமல்ல பயமே குடி கொண்டிருக்கும். இதுவே இயல்புமாகும். சாதாரணமாகச் சிந்தித்தாலே இது விளங்கும்.

உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவன் அங்கே விரிவுரையாளர்களதும் பேராசிரியர்களதும் போதனைகளாலும், விடுதிவாழ்வில் மற்றவர்களோடு கலந்து பழகுவதாலும், கூச்சம், ஒதுங்கிப்போதல் ஆகியவற்றை அகற்றி மற்ற மாணவர்களுடன் சகஜமாகப் பழகும் தன்மையை அடைவான்.

'ராகிங்' சம்பந்தமான இன்னொரு விடயம் பலருக்குத் தெரியாது என நினைக்கிறேன், ஒரு மாணவன் பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டமை சம்பந்தமான பெறுபேறு கிடைத்த பல மாதங்களின் பின்னரே மாணவன் பல்கலைக்கழகத்திற்குள் செல்வான்.

ஆனால் பெறுபேறு வந்த உடனேயே "அண்ணன்மார்" புது மாணவனுடைய வீடு தேடி வந்து விடுகிறார்கள்! உண்மையில் 'ராகிங்' என்பது பல்கலைக்கழகத்தினுள் நுழைந்த பின்பே நிகழ்த்தப்படுவது முந்திய வழக்கம். ஆனால் இங்கு நடப்பது பெரிய அக்கிரமமான அடாவடித்தனம்!

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவனை அவனது தாய் தந்தையர் முன்னிலையிலேயே இன்ன இடத்திற்கு இத்தனை மணிக்கு வரும்படி பகிரங்கமாக உத்தரவு போட்டுவிட்டுப் போய் விடுவார்கள்!

அவர்கள் சொன்ன நேரத்திற்குச் சென்று ஒத்துழைக்காவிட்டால் பல்கலைக்கழகத்திற்குப் போனபின்பு பலமடங்கு அதிகமான தண்டனைக்கு உள்ளாக வேண்டுமே என்றபயத்தில் புதியமாணவன் குறித்த நேரத்திற்கு குறித்த இடத்தில் ஆஜராவான்.

ஆனால்அவனது பெற்றோரோ, சாப்பாடு கூட உட்கொள்ளாமல்தமது பிள்ளைஎன் னென்ன சித்திரவதைக்குஉள்ளாவானோ என்று பயந்தவாறு அவன் வீடு வரும் வரை கண் விழித்துக் காத்திருப்பார்கள். அவன் வீடு வந்ததும் ராகிங்கினால் ஏற்பட்ட உடல்வலிக்கு எண்ணெய் பூசி ஒத்தடம் கொடுத்து சிகிச்சை செய்வார்கள். சித்திரவதை எவ்வளவு மோசமாக நடந்திருப்பினும் புதிய மாணவர் எல்லாவற்றையும் தமது பெற்றோருக்குச் சொல்வதில்லை.

இந்த விடயத்தில் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவர்கள் குறிப்பாக நம் தமிழ் மாணவர்கள்தான் மிகவும் மோசமானவர்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியலாளர் நெறிக்கு அனுமதி கிடைத்த மாணவன் ஒருவனுடைய தாய் தன்மகன் பல்கலைக்கழகம் செல்லுமட்டும், இங்கு உள்ளூரிலேயே சித்திரவதை செய்யப்பட்ட கதையை கண்ணீர்மல்க கூறியதை நான் அறிவேன்.

பல்கலைக்கழகம் சென்றதும் "அண்ணன்மார்" ஆயிரக்கணக்கான 'டிப்ஸ்" அடிக்கச் சொல்லுவார்களே என்பதற்காக, இங்கு வீட்டிலேயும் "டிப்ஸ்' பயிற்சி செய்வதையும்—

25 தடவைக்கு மேல் செய்ய முடியாமல் "இங்கு 25 தடவை செய்யவே களைத்துப் போகும் நான் அங்கே "அண்ணன்மார்" கொடுக்கும் "ஆயிரம்" "டிப்ஸ்களை" எப்படிச் செய்யப் போகிறேன்," என்று அந்த மாணவன் ஏங்கி மனச் சோர்வடைந்ததையும் பார்த்து அந்தத் தாய் பட்ட வேதனை கொஞ்சமல்ல.

பேராதனையில் ஐந்து ஆறு லீட்டர் தண்ணீர் குடிக்கச் சொல்வார்களே என்பதற்காக தினமும் வீட்டிலேயே

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இறைவல்லமையாளரின் விசுவரூபம் அடியாருக்குப் பாவ விமோசனம்

ஒருவர் தன்னிடமுள்ள பலத்தை, திறனை, அதிகாரத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் சந்தர்ப்ப நிலையை "விசுவரூபம்" எனக் கூறுவர். அந்த நிலையானது திறனறிந்து, தேவை அறிந்து வெளிக்காட்டப்படுவது சிறப்பானது. அன்றிக் கோபத்தாலோ அடுத்தவரின் பலவீனத்தாலோ வெளிக்காட்டப்படுதல் பிழையானதும், துஷ்பிரயோகமானதுமான செயலுமாகும்.

பதவியில் இருப்போர் முதல் பாமர மக்கள் வரையுள்ள எல்லோரிடமும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த விசுவரூப குணம் அவ்வப் போது தோற்றுவது சகஜம். இதனால் நன்மை, தீமை இரண்டுமே அச்சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றன. திடீர் திடீரெனச் சிலருக்கு கோபக்குணங்கள் ஏற்பட்டதும், மக்கள் அவர்களின் அப்போதைய சினத்தையும், சினமுற்றவர் நிலையையும் விசுவரூபம் எடுத்திருப்பதாக வர்ணிப்பார்கள்.

விசுவரூபம் பற்றி ஆய்ந்து நோக்குமிடத்து இராமாயணத்தில் அனுமானும், பாரதத்தில் கண்ணனும், கந்தபுராணத்தில் கந்தவேளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் விசுவரூபம் எடுத்ததும் அவற்றால் விளைந்த பலாபலன்கள் சுவையானவையும் அறிவுக்கு விருந்தானமையுமான தெய்வீக அருட்காட்சிகளாக விவரிக்கப்பட்டுள்ளன.

இராமாயணத்திலே அனுமான் இராமதூதனாக சீதையைச் சிறைமீட்க வந்து எதிரிகளிடம் பிடிபட்டு அதிலிருந்து தப்புவதற்காக விசுவரூபம் எடுத்ததும், பாரதத்திலே பஞ்சபாண்டவர்களுக்குத் துணையாக அர்ச்சுனனுடைய தேருக்குச் சாரதியாக இருந்து போர்க்களத்திலே, அர்ச்சுனனுக்கு முன்னால் கண்ணன் விசுவரூபம் எடுத்ததும், கந்தபுராணத்திலே சூரபன்மனுடன் யுத்தம் புரிந்த வேளை முருகன் தம் பகைவனாக முன்னின்ற சூரனுக்கு விசுவரூப தரிசனம் கொடுத்ததும் புராண, இதிகாச வரலாறுகளில் உயர்ந்த ரசனைக்கும், ஆய்வுக்குரியனவாகவும் ஆன்றோரின் ஆழ்ந்த கவனத்திற்குரியனவாகவும் காணக்கிடக்கின்றன.

### அழிவில் ஆக்கம்

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் எனும் ஆய்வுக்கேற்ப முதன்மை இதிகாசங்களில் இராமாயணத்தில் தூதுவனாகிய அனுமார் விசுவரூபமெடுத்து அழிவுகளிலே ஆக்கம் கண்டான்.

மகாபாரதத்திலே, அர்ச்சுனனின் தேரோட்டியாக, வழிகாட்டியாக வந்துபோர்க்களத்தின் மத்தியிலேயே விசுவரூபமெடுத்த கண்ணபிரான் உலகமே தமக்குள் அடக்கம் எனக் காட்டி கீதோபதேசஞ்செய்து அழிவிலே ஆக்கம் காட்டினான்.

இது போன்றே கந்தபுராணத்திலே, வரம் பல பெற்றுப் பலமிகப் பெற்ற சூரபன்மனுக்கு, குமரக்கடவுள் போர்க்களத்தில் நின்றபடியே விசவரூப தரிசனமாகத் தம் திருப்பெருவடிவம் காட்டி ஆணவத்தால் வரும் அழிவுகளை அடக்கி அருளாட்சி புரிந்தான்.

ஞானக் கதிர்

புராணங்கள் இதிகாசங்களில் வரும் விசுவரூபங்களையும், அவற்றின் செயற்பாட்டு விளைவுகளையும் காலக் கண்ணோட்டத்துடன் சிந்திக்குமிடத்து சிந்தனைக்கு விருந்தான அரும்பெரும் தத்துவங்கள் தெளிவாவதைக்கவனிக்க கூடியதாக உள்ளது.

பொதுவாக, மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது அற்ப அறிவும், துர் ப்ரவிருத்தியும் படைத்த சரீரபலமும் கொண்டோருக்கு நல்லறிவும், அதன் வழி நல்வாழ்வும் கிடைக்கச் செய்வதற்கென்றே காலந்தோறும் விசுவரூபம் எடுத்து தீயன தொலைத்து நல்லன நிலைக்க இறைவன் மாய வேடம் தாங்குகின்றான் எனலாம்.

கலியுகவரதனாகிய கந்தப்பெருமான் இறைவனிடம் வரம்பல பெற்ற பக்தனான சூரபன்மன் ஆணவ மேலீட்டினாற் தேவர்களைத் துன்புறுத்தவும் சூரனின் கொடுமை தாங்காது தேவர்கள் முருகப்பெருமானிடம் முறையிட்டனர். அதற்கு இரங்கிய முருகவேள் தேவர்களைக் காத்தற் பொருட்டு சூரனின் ஆணவத்தை அடக்கித் தனது எல்லையற்ற திருப்பெருவடிவைக் காட்டிச் சூரனுக்கு நல்லறிவைப் புகட்டித் தேவர்களைக் காத்தருள்கின்றார்.

புராணங்கள் பலவற்றிலும் அசுரர்களை அரக்கர்கள் அழித்ததாகவே வரலாறுகள் உள்ளன. ஆனால் சூரன்போரிலோ சூரனாகிய ஒருவனை இரு உயிராக்கி முருகப்பெருமான் அவர்களை என்றும் தம்முடன் சேர்த்துக் கொள்கின்றார். தேவர்களையும் காத்ததுடன் அவர்களைத் துன்புறுத்திய அசுரனையும் ஆட்கொண்டமை கந்தபுராணத்தின் பெரும் சிறப்பாகும்.

மனிதர் விசுவரூபமெடுத்தால் பாவங்களைச் செய்து பாவிகளாகின்றனர். இறைவல்லமையுடையோர் விசுவரூபமெடுத்தால் பாவிகளையும் மன்னித்து நல்வாழ்வும் நல்லருளும் வழங்குவார்கள்.

இதனாற்றான், மக்கள் வாழ்வில் 'கோபம் பாவத்தைத் தேடும்' எனும் முதுமொழிவழங்கி வருகின்றது: தெய்வம் கோபித்தால் பாப விமோசனமேஉண்டாகிறது.

கந்தசஷ்டி விரத நாளிலே கந்தபுராணத்தின் உயர்ந்த தத்துவத்தை நாமும் பின் பற்றி [illegible] திருவருள் பெறுவோமாக.

— நீர்வை மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி 20' கலர் T.V, நசனல் டெக் N.V. 370 என்பன விற்பனைக்குஉண்டு. தொடர்பு: K. சிவபாதசுந்தரம், 66, மணல்தறைலேன், திருநெல்வேலி. [50993]

வெள்ளவத்தையில் திறம்பட நடந்துவரும் ரெக்கோடிங் பார் (Music and Recording Bar) நவீன உபகரணங்களுடனும், C.D யுடனும் விற்பனைக்குண்டு. இடவசதி தேவைப்படின் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். தொடர்பு: தொலைபேசி இல. 594568. [சி/1961]

5'×5' திரையுடன் Colour Video Projector. Naitonal (Japan) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: யோகராசா ரமேஷ், (சங்கக்கடை வீதி), கைதடி, நுணாவில், சாவகச்சேரி. சனி – ஞாயிறு பார்வையிடலாம். [50983]

### தவறிவிட்டது

ம. கமலாம்பிகை என்பவரது அடையாள அட்டை, பென்சன் காட், விசேட அடையாள அட்டையுடன் கூடியபேர்ஸ் கட்டப்பிராய்க்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. கனகரத்தினம், பிரதேச செயலகம், நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [50994]

### தென்னம் நாற்றுகள்

நல்லினத் தென்னம் நாற்றுகள் (பல இனங்கள்) உடன் விற்பனைக்குண்டு. குறுகிய காலத்தில் பயன் தரக்கூடியவை, வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை. [51002]

## கட்டடம் புனரமைப்பு

வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மலசல கூடம், நூல் நிலையம், ஆசிரியர் விடுதிக்கட்டடம் என்பன சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (ஐ-135)

## திருடரிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்கள்

நெல்லியடி, நவ. 7

திருடர்களிடமிருந்து மீட்கப்பட்ட மூன்று சைக்கிள்களும் வீட்டுப்பாவனைப் பொருள்களும் நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இந்தப் பொருள்களைப் பறிகொடுத்தோர் அத்தாட்சிகளைக் காட்டி, பொலீஸ் நிலையத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (இ-109)

## இளம்பெண்ணைக் காணவில்லை

வடமராட்சி, நவ. 7

உடுவிலிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய இளம்பெண் ஒருவரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

தொண்டமானாற்றைச் சேர்ந்த துரைச்சாமி மேகலமாலா (21 வயது) என்பவரையே காணவில்லை என்று அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி இப்பெண் உடுவிலிலிருந்து தொண்டமானாற்றுக்குத் திரும்பும்போது காணாமல் போனதாக ஈ.பி.டி.பி. அமைப்பிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-173)

## பாராட்டு விழா

அல்லையம்பதி சிவசுப்பிரமணியர் தேவஸ்தான
பிரதம குரு
சிவப்பிரம்மஸ்ரீ
**ராம். கெங்காதரக் குருக்கள்**
(சாரதாபீடம்)

இணுவில் காயத்திரீபீடம் தர்மசாஸ்தா குருகுலத்தால்
**"சிவாகமகிரியா தத்வநிதி"**
பட்டம் வழங்கப்பட்டமைக்குப் பாராட்டி
**பொன்னாடை போர்த்தல்**


காலம்: 07 - 11 - 97 வெள்ளிக்கிழமை
(இன்று மாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்,**
அல்லையம்பதி, கரவெட்டி.

(51006)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 12 — 1937

மறைவு: 17 — 11 — 1996

**அமரர் கதிரிப்பிள்ளை இராசரத்தினம்**
தெல்லிப்பழை

திதி: 1997 — 11 — 07

தங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு
மனைவி, பிள்ளைகள்.

இலங்கை வங்கி அருகில்,
சுன்னாகம்.

(51001)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்: 07 — 02 — 1937

மறைவு: 08 — 10 — 1997

**திருமதி மாணிக்கம் செல்லத்துரை**
(மணி)

8-10-97 இல் பிரான்சில் காலமாகிய எனது தாயாரின் பிரிவுச் செய்தி கேட்டு ஆறுதலளித்தோருக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

7-11-97 வெள்ளிக்கிழமை 41/73, செட்டியார் தோட்டம் செம்மணி வீதியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திருமதி
பாக்கியலட்சுமி இராசேஸ்வரன் (வேவி)
(மகள் குடும்பத்தினர்)

41/73, செட்டியார் தோட்டம்,
செம்மணி வீதி,
நல்லூர்.

(51009)

## ஜனவரி முதல் கடன் திட்டம்

திருநெல்வேலி, நவ.7

நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களான விவசாயிகளுக்கு விவசாய செய்கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாய கடன் வழங்கும் திட்டமொன்றை எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து செயற்படுத்தவுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்: (ஐ-135)

**S. M. FERNANDO**
ஆதரவில்
சுன்னாகம்
**றோட்டரக்ட் கழகம்**

ROTARACT CLUB

பாடசாலை இன்றரக்ட் கழகங்களுக்கிடையில்
நடத்தும்
**பட்டிமன்றச் சுற்றின்**
**இறுதிப் போட்டியும்**
**பரிசில் வழங்கும் வைபவமும்**

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
காலம்: 07-11-97 வெள்ளிக்கிழமை
பி. ப. 3-00 மணி

பங்குபற்றும் அணிகள்:
யா/ யூனியன் கல்லூரி
எதிர்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

பிரதம விருந்தினர்:
Prof. P. கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்துநாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்:
Rtn. A. பஞ்சலிங்கம்
(இளைஞர் சேவை இயக்குநர்
யாழ். றோட்டரிக்கழகம்)
S. M. பெர்னாண்டோ
(உரிமையாளர், S. M. பெர்னாண்டோ)


### நிகழ்ச்சி நிரல்

பி. ப. 3-00 மங்கள விளக்கேற்றல்
பி. ப. 3-05 மௌன வணக்கம்
பி. ப. 3-06 தமிழ்த்தாய் வாழ்த்து
யா/ இந்து மகளிர் கல்லூரி
பி. ப. 3-10 பட்டிமன்றம்
பி. ப. 4-00 வரவேற்புரை
Rtr. PP. A. J. G. ஜெயச்சந்திரா
பி. ப. 4-05 தலைமையுரை
Rtr. V. P. சசிவர்ணன்
பி. ப. 4-15 சிறப்பு விருந்தினர் உரை
பி. ப. 4-25 பிரதம விருந்தினர் உரை
பி. ப. 4-40 சுய தொழிலுக்கான கயிறு திரிக்கும் இயந்திரங்கள் வழங்கல்
பி. ப. 4-45 பரிசில் வழங்கல்
பி. ப. 5-00 நன்றியுரை
Rtr. V. K. ரவிகரன்

செயற்திட்டக்குழு
சுன்னாகம், றோட்டரக்ட் கழகம்

(51007)

## உங்கள் பிறந்த நாளில் எங்கள் நினைவஞ்சலிகள்.



பிறப்பு: 07 — 11 — 1933

இறப்பு: 13 — 04 — 1996

**திருமதி இரத்தினம்மா துரைராசா**
(பிரகாசியம்மா ஞானமுத்து)

அன்பின் பிறப்பிடமே!
எங்கள் குடும்ப ஒளியே!
தேவனை எமக்குத் தந்த செல்வமே!
உங்கள் பிறந்த நாளில்
எங்கள் நினைவஞ்சலிகள்.

ஆறாத்துயருடன்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(51008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொதியா? பொறியா?

இப்போதுள்ளது போலவே வடக்கு—கிழக்குஇணைந்திருக்க வேண்டுமா என்பதனை நிர்ணயிப்பதற்கு திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். அரசின் அந்த முடிவில் மாற்றமில்லை. சர்வஜன வாக்கெடுப்பு இன்றியே வடக்கு—கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்ற தமிழ்க் கட்சிகளின் வாதம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது—

அரசமைப்புத்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மேற்கண்டவாறு மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். ''இந்து'' நாளிதழுக்கு வழங்கியுள்ள செவ்வியில், அவர் இதனை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அழுத்திக் கூறியிருக்கிறார்.

அரசின் நிலைப்பாடு இதுவே என்றால், தமிழ்க் கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் இனி என்ன வேலை? பொதியும் வேண்டாம்; பொட்டலமும் தேவையில்லை என்று கூறிவிட்டு அரசுக்கு அளிக்கும் ஆதரவை நிறுத்தப் போவதாக அறிவிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம் என்ற தமிழர்களின் அரசியல் கோட்பாடு — முதலாவதான அரசியல் அபிலாசை— இன்று நேற்று முன் வைக்கப்படும் ஒன்றல்ல. கடந்த ஐந்து தசாப்தங்களாக வலியுறுத்தப்படும் விடயம். இலங்கையின் மூன்று பிரதமர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று.

வடக்கு — கிழக்குஇணைந்த தமிழ் மாநிலம் என்பதனை ஒரு கோரிக்கை என்று கூடச் சொல்ல முடியாது. அது தமிழர்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமை.

ஏற்கனவே இணைந்திருக்கும் வடக்கு-கிழக்கைப் பிரிப்பதற்கு அரசு கங்கணம் கட்டி நிற்பது— சர்வஜன வாக்கெடுப்பு என்ற நிலையில் அழுங்குப் பிடியாக நிற்பது— தமிழர்களைத் தலையில் அடித்து வீழ்த்துவதாகும்!

தமிழர்களின் தாயக நிலைப்பாட்டுக்கு முரணாக, அதனை கூறுபோட்டு, துண்டுகளாக்கி நறுக்குவதற்கெனச் சர்வஜன வாக்கெடுப்புகளை நடத்தும் அரசின் முடிவு நிச்சயமாக உள்நோக்கம், கெட்ட நோக்கம் (UlteriorMotive) கொண்டதே

ஒப்பீட்டளவில் இப்படி ஒரு நோக்கம்,— இந்தளவு ஆபத்து விளைவிக்கும் நோக்கம்— முந்திய அரசுகளுக்கு இருந்ததில்லை என்று கூறுமளவுக்கு இன்றைய அரசு குட்டையைக் குழப்ப முனைவது கண்டிக்கப்பட வேண்டியதாகும்,

இப்போது இணைந்திருக்கிறது வடக்கு - கிழக்கு. அது அவ்வாறே இருக்க வேண்டும் என்பதனை உணர்ந்துகொண்டு தான் ஜே ஆர். ஜெயவர்த்தனா கூட அதற்கு இணங்கி ஒப்பமிட்டார். அதில் போய் இப்போது கை வைத்துக்குழப்பி, வெட்டி, நறுக்கி, சிதைப்பதற்குப் பெயர் தான் நியாயமான தீர்வா?

கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தமிழர்களுக்குத் தெரிந்தது தான். தமிழர்கள் அதன் மீது உரிமை கொண்டாடாமல் தடுக்கும் பொருட்டு, கிழக்கின் இன விகிதாசாரத்தை மாற்றி விடுவதற்காகவே அங்கு பெரிய குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக விதைக்கப்பட்ட அந்தப் பயிரின் அறுவடையை இப்போது அள்ளி விடும் உள்நோக்கமே கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு என்ற முடிவு.

தமிழர்களின் வசம் இப்போதுள்ள அவர்களின் தாயகத்தைத் துண்டு போட வைக்கப்படும் பொறியாகவே அரசின் தீர்வுப்பொதி அமைக்கப்பட்டுள்ளது. இதில் இனிமேலும் ஐயம் என்ன?

# நிலக்கண்ணிவெடிகளால் இதுவரை 2,200 துருப்புகளுக்குமேல் காயம்

## 600 முதல் 800 வரையான துருப்பினர் மரணம்

லண்டன், நவ. 7

இலங்கையில் நடைபெறும் இனப் போரில் இதுவரை 2 ஆயிரத்து 200க்கு மேற்பட்ட துருப்பினர் நிலக் கண்ணி மற்றும் மிதிவெடிகளினால் காயமடைந்துள்ளனர். 600 முதல் 800 வரையிலான துருப்புக்கள் இறந்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆள்களுக்கு எதிரான கண்ணி வெடிகளை அகற்றுவதில் நன்கு தேர்ச்சி பெற்றவரும், ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியுமான ஜேர்காட் போர்மன் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்து திரும்பியது குறித்துத் தமது ஆய்வுரையில் இக்பால் அத்தாஸ் மேலும் கூறியதாவது:-

நிலக் கண்ணிவெடிகள் என்பது நடைபெறும் யுத்தத்தில் ஒரு முக்கியமான விடயம்.

கேள்வி: உலகம் எங்கும் நிலக்கண்ணி வெடிகளை ஒழிக்க வேண்டும் என்றுகூறப்படுகின்றது. இந்த விவகாரத்தில் விடுதலைப்புலிகளும் அரசும் ஒத்துழைக்கும் என்று நினைக்கின்றீர்களா?

பதில்: இலங்கையைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கிய பிரச்சினையாகவுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள நிலக் கண்ணிகளை அகற்றுவதில் பிரச்சினைஎதுவுமில்லை. காரணம் யாழ்ப்பாணம் துருப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. மற்றைய இடங்களில் குறிப்பாக வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருக்கின்றது. இந்த இடங்களில் நிலக்கண்ணிகள் அதிகமாகப் பாவிக்கப்பட்டுள்ளன. அப்படியான நிலவரங்களில் துருப்பினரும், புலிகளும் ஒத்துழைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்கள் என்பதற்கான அறிகுறிகள் இல்லை.

கேள்வி: இப்போது கம்போடியா, அங்கோலா போன்ற இடங்களிலெல்லாம் போர் முடிந்த பின்னரும் புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகளால் பல்லாயிரக் கணக்கானமக்கள் கால்களை, கைகளை இழந்து தவிக்கின்றனர். எனவே, நிலக்கண்ணி வெடிகளை உற்பத்தி செய்யக் கூடாது என்ற கருத்து இருக்கும் போது இலங்கையில் அந்தக்கருத்துப்பரவுமா?

பதில்: நீங்கள் சொன்னது போல யுத்தம் முடிந்த நாடுகளிலேயே இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. நாம் யாழ்ப்பாணத்தைப் பார்க்கின்ற போது அங்கு யுத்தம் முழுமையாக முடிவடைந்துவிட்டது என்று கூற முடியாது. ஆனால் அரச படையினர் குடாநாட்டைக் கைப்பற்றியுள்ளனர் என்பதால் அங்குள்ள நிலக்கண்ணிகளை அகற்றுவதற்குமுடியும். (இ-5)

# மணிக்கூண்டுக் கோபுரத்தை திருத்த பிரிட்டிஷ் உதவி

யாழ். நகரில் நீண்டகாலமாகப்பழுதடைந்த நிலையில் உள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தைத் திருத்தி அமைக்க கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதர் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

புளொட் அமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் கடந்தவாரம் கொழும்பில் பிரிட்டிஷ் தூதரைச் சந்தித்தார்.

சேதமடைந்துள்ள யாழ். மணிக்கூண்டுக்கோபுரத்தைப் புனரமைக்க உதவுமாறு அவர் அச்சமயம் பிரிட்டிஷ் தூதரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக லண்டனுடன் தொடர்பு கொண்டு நிதி உதவி பெற்றுத்தர ஆவன செய்வதாக பிரிட்டிஷ் தூதர் உறுதி அளித்துள்ளார்.

போர் அனர்த்தங்களால் சேதமடைந்துள்ள பொதுக் கட்டடங்களைப் புனரமைக்கும் பணிக்கு புளொட் அமைப்பு தற்சமயம் உதவி வருகின்றது.

மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திருத்தி மெருகூட்டவும் புளொட் அமைப்பு முயற்சி எடுத்து வருகின்றது.

# அம்புலன்ஸ் தரிப்பிடம் சேதம்

நெல்லியடி, நவ. 7

மந்திகை மருத்துவமனையிலுள்ள அம்புலன்ஸ் தரிப்பிடத்தின் கூரை சேதம் அடைந்துள்ளதால் அங்கு இரவில் நிறுத்தப்படும் புதிய அம்புலன்ஸ் வண்டி மழையில் நனைகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இப்புதிய அம்புலன்ஸ் வண்டியை, பிரெஞ்சு மருத்துவக் குழு அன்பளிப்புச் செய்திருந்தது. (ஐ-109)

# தமிழ் தாத்தாவின் சேவைகளை தமிழ் உலகம் என்றும் மறக்காது

## நினைவு விழாவில் உரை

வடமராட்சி, நவ. 7

தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார் தமிழ் மொழிக்கு ஆற்றிய அரும் பெரும் சேவைகளை தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறந்துவிடமாட்டாது. கந்த முருகேசனால் எழுதப்பட்ட அளப்பரிய தமிழ்ப் பொக்கிஷமான 'நல்லை நாவலன் கோவை'யை அச்சில் கொண்டுவர புலோலி தமிழ் இளைஞர் கழகம் நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டத்தக்கதாகும்.

இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளரும், பௌராணிகருமான வீ.எஸ். ஏகாம்பரநாதன் கூறினார்.

புலோலி தமிழ் இளைஞர் கழகமும், புற்றளை சனசமூக நிலையமும் இணைந்து புற்றளை மகா வித்தியாலயத்தில் நடத்திய புலோலியூர் தமிழறிஞர் கந்த முருகேசனார் நினைவு விழாவிலும், அந்நினைவையொட்டிய பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

இவ்விழாவை யொட்டி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை நடத்தப்பட்டு அருகில் உள்ள அறிஞர் கந்த முருகேசனார் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ரி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வடகிழக்குமாகாண இணைப்பதிகாரி வீ. வீரபத்திரபிள்ளை மங்கள விளக்கேற்ற, புற்றளை சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ எஸ். விஜயரத்தினக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

வீ. எஸ். ஏகாம்பரநாதன் இவ்விழாவில் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழை வளர்த்தபெரியார்களை நினைவு கூர்ந்து. அவர்களின் தமிழ்ப் பணிகளை எதிர்காலச் சந்ததியினருக்கு வெளிப்படுத்த வேண்டும். தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் தமிழை மட்டுமே நேசித்து தமிழை வளர்க்க அரும்பெரும்தொண்டாற்றினார். இவரது தமிழ்ப் பணி தமிழ் உலகில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இவரிடம் தமிழ் கற்ற பலர் புலவர்களாக, பண்டிதர்களாக தமிழ் அறிவாளிகளாக, தமிழ்ச்சான்றோர்களாக இன்று திகழ்ந்து வருவதுடன் தமிழையும் வளர்த்து வருகிறார்கள்.

இவரால் இயற்றப்பட்ட ''நல்லை நாவலன்கோவை'' நீண்டகாலமாக அச்சு வாகனம் ஏற்றப்படாமல் இருந்த குறையை புலோலி தமிழ் இளைஞர் கழகமும் புற்றளை சனசமூக நிலையமும் இணைந்துதீர்க்க முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும். இப்பணிக்கு இப்பகுதி மக்களின் ஒத்தாசையும் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்—என்றார்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பரமேஸ்வரி பொன்னையா, வடமராட்சி வடக்கு பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் ஏ. என். எஸ். திருச்செல்வம் புற்றளை சனசமூக நிலையச் செயலாளர் செல்வன் ஜே. பிரதீபன் ஆகியோரும் இவ் விழாவில் உரையாற்றினார்கள்.

கந்த முருகேசனார் நினைவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-173)

# பல்கலை...

(ஐந்தாம் பக்கத்தொடர்)

லீட்டர் கணக்காக தண்ணீர் குடித்துப் பழகுவதும், குடிக்க முடியாமல் அவஸ்தைப் படுவதும், இன்னொரு கண்றாவி!

யாழ். பல்கலைக்கழகமுட்பட எல்லா பல்கலைக்கழகங்களிலும், பகிடி வதைக்கு எதிரான ''அன்ரி ராகிங்'' மாணவர்கள் இருக்கிறார்கள், இவர்கள் பகிடி வதைக்கு எதிரானவர்கள் என்பதனால் இவர்களைக் குஷ்டரோகிகள் போல் தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கி வைத்தும், அவர்களுக்கு உபத்திரவம் செய்தும் வருகிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவெனில் வரப்பிரகாஷ் பகிடி வதையால் இறந்த பிறகு, எல்லாப் பல்கலைக்கழக மாணவர்களும் தங்களுக்கும் பகிடிவதைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்பது போல பகிடிவதைக்கு எதிராகப் போர்க் கொடியுயர்த்திப் பேரணிகள் நடத்துவதும், அறிக்கைகள் விடுவதும்தான்!

அப்படியென்றால் இவ்வளவு காலமும் ''ர்கிங்'' செய்தது யார்?

தென்னிந்தியாவில் தமிழகத்தில் ஒரு துணைவேந்தரின் மகனான நாவரசு என்னும் வைத்திய நெறி கற்கும் மாணவனை பகிடிவதையின் பேரால் துண்டுதுண்டாக வெட்டிக் கொலை செய்து குளத்தில் போட்ட தகவல் இங்கு பலருக்கு த்தெரிய நியாயமில்லை.

வரப்பிரகாஷின் மரணத்தினாலேற்பட்ட சுடலை ஞானத்தினால் பகிடிவதையை ஒழித்துக் கட்டுவோம் என்று எல்லோரும் சேர்ந்து கூச்சல் போடுகிறார்கள்.

பகிடிவதைக்கு எதிராக [illegible] கடுமையான சட்டமியற்றித் தடை செய்யாவிட்டால் பகிடிவதை தொடரும். உயிர்க் கொலைகளும் தொடரவே செய்யும்!

# சமய சந்நிதியில்

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருக்கல்யாணஉற்சவம்நடைபெறும்.

முருகப்பெருமானுக்குத் திருக்கல்யாணம் நடைபெற்று வள்ளி, தெய்வானை சமேதராக வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை திருக்கல்யாணத்தை முன்னிட்டு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெறும். (ஐ)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30மணிக்கு முருகப்பெருமானுக்குத் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று, முருகன் வள்ளி தெய்வானை சமேதராக வீதிவலம் வருவார். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்குத் திருக்கல்யாணம் நிகழ்வு இடம்பெற்று சுவாமி முருகன் வள்ளி,தெய்வானை சமேதராக வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் ஆலய ஐப்பசி வெள்ளி உற்சவத்தையிட்டு இன்று பிற்பகல் 2-00 மணிக்கு விசேட பூசையும், ஆலய பிரார்த்தனைக் குழுவினரின் பஜனையும் இடம்பெறும்.

★ ★ ★

மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் கோயிலில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9-30மணி அளவில் பிராயச்சித்த சாந்தியும் சேட அபிசேக ஆராதனையும் இடம்பெறவுள்ளது.

## நாளை

**ஐப்பசி 22**

சனிக்கிழமை

திதி: அட்டமி முற்பகல் 11.35வரை.

நட்சத்திரம்: அவிட்டம் பின் இரவு 2.34 வரை.

சுபநேரம்: 3.05-4 35

ராகுகாலம்: 9 05-10.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராதனைப் பல்கலைக்கழக

# வெளிவாரிப் பரீட்சைகளை

# இங்கு நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 7

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்திலும் நடத்த ஏற்பாடு செய்யுமாறு பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தர் லெஸ்லி குணவர்த்தனாவிடம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இந்தப் பரீட்சைக்கு ஏராளமான மாணவர்கள் தோற்றுவதால் யாழ்ப்பாணத்தில் இந்தப் பரீட்சையை நடத்துவது நல்லது என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது குறித்து பரிசீலனை செய்வதாகத் தெரிவித்த துணைவேந்தர் லெஸ்லி குணவர்த்தனா, கடந்த வருடம் நடந்த பரீட்சையின் முடிவுகள் விரைவில் வெளியிடப்பட இருப்பதாகவும், அதன் பின்னர் பல்கலைக்கழக கவுன்ஸில் கூடி இவ்வருடப் பரீட்சைக்கான திகதியை முடிவு செய்யும் என்றும் கூறினார். (இ-3)

## பிரதேச சபை செயலர் நியமனம்

தென்மராட்சி, நவ. 7

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளராக வேலாயுதபிள்ளை அருணந்தி வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச சபை செயலாளர் ஐ வைரமுத்து இளைப்பாறிச் சென்றதையடுத்து இப்பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

## இருதய சிகிச்சைக்காக சிறுவன் கொழும்பு பயணம்

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட செல்வன் கலகலிங்கம் விமல்ராஜ் (வயது 3), திருமதி யோகேஸ்வரி கனகலிங்கம் (35 வயது) ஆகிய இருவரும் இந்தியாவுக்கு சென்று இருதய சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்கான நிதிக்கு இதுவரை 4 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா சேர்ந்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள லயன்ஸ் கழகங்களும் மற்றும் பொது நல நிறுவனங்களும், கல்லூரிகளும், தனிப்பட்டவர்களும் இந்த நிதிக்கு பண உதவி செய்திருப்பதாக மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன். செ. ஞானராஜ் தெரிவித்தார்.

லயன்ஸ் கழகங்களில் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், நல்லூர் லயன்ஸ் கழகமும் அதிகளவு நிதியினை சேகரித்து இதற்கு வழங்கியுள்ளன.

இதேவேளை இருதயத்தில் ஏற்பட்ட நோய்க்கு வைத்திய சிகிச்சை பெறுவதற்காக மேற்படி சிறுவனும், தாயும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவினரால் கொழும்புக்குக் கூட்டிச்செல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இவர்களை தென்னிந்தியாவில் உள்ள இருதய மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை —

சிகிச்சைக்கான நிதி பற்றாக்குறையாக இருப்பதால் ஜனாதிபதி நிதியிலிருந்து நிதி உதவி பெறுவதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## வரப்பிரகாஷ் மீதான ராகிங்: 67பக்க அறிக்கை தயாரிப்பு

கண்டி, நவ. 7

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் எஸ். வரப்பிரகாஷின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய பல்கலைக்கழக விசாரணைக் குழுவின் அறிக்கை 67 பக்கங்களை கொண்டது என உபவேந்தர் பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா தெரிவித்தார்.

மேற்படி அறிக்கை நேற்று 18 பீடாதிபதிகளையும் உள்ளடக்கிய உயர்மட்ட ஒழுங்காற்று நடவடிக்கைக் குழுவினால் ஆராயப்பட்டது என்றும்—

சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீதான தண்டனை குறித்து தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் உபவேந்தர் மேலும் தெரிவித்தார்.

அதே சமயம் நேற்று மாலை ராகிங் சம்பவம் குறித்து உபவேந்தர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பீடாதிபதிகளுடன், மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-21)

## ஆஸ்பத்திரி வெற்றிடங்களை நிரப்ப இங்கேயே பரீட்சை

### சுகாதார அமைச்சு அதிகாரி தகவல்

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்திருப்பதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவோருக்கான நியமனங்களை யாழ்ப்பாணத்திலேயே வைத்து வழங்குவதன் மூலம் பல்வேறு சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

பதவிகளுக்கான விண்ணப்பங்களை எப்போது கோருவது, மற்றும் நேர்முகப் பரீட்சை நியமனங்கள் வழங்குவது போன்றவை சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் இந்தமாத இறுதியிலோ அல்லது அடுத்த மாத முற்பகுதியிலோ யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-17)

## நஷ்டஈட்டுக் கொடுப்பனவு பெறுவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 7

1987, 1988 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பீடு தொடர்பான நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கு அக்கொடுப்பனவை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

இழப்பீட்டுக்கு விண்ணப்பித்த அதிபர்கள், ஆசிரியர்கள் தவிர ஏனைய அரச உத்தியோகத்தர்கள் பலருக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது. இதனை ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டி நடவடிக்கைகளை எடுப்பதற்கு வடமாகாண அதிபர் சங்கம் முன்வந்துள்ளது.

எனவே இந்த இழப்பீட்டிற்கு விண்ணப்பித்து இதுவரை நிவாரணம் பெறாத அதிபர், ஆசிரியர்கள் தமது விவரங்களையும், கோவை இலக்கங்களையும் உடனடியாக ''தலைவர், வடமாகாண அதிபர் சங்கம், வயாவிளான் ம.ம. வித்தியாலயம், உரும்பிராய்'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரீ)

## யாழ். போதனா ஆஸ்பத்திரியில் 12 டாக்டர்களுக்கு உள்ளக பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். மருத்துவ பீடத்தில் சித்தியடைந்து வெளியேறிய டாக்டர்களில் 12 பேருக்கு யாழ். மாவட்டத்தில் உள்ளகப் பயிற்சிக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த இந்த 12 பேரும் தாம் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து டக்ளஸ் தேவானந்தா சுகாதார அமைச்சர் நிமால் சிரிபால் டி சில்வாவுடன் பேச்சுநடத்தி இந்த 12 பேருக்கும் யாழ். ஆஸ்பத்திரிகளில் நியமனம் வழங்க வேண்டும் என்று கோரினார்.

யாழ். மாவட்டத்தில் நிலவும் வைத்தியர்கள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இந்த நியமனத்தை வழங்குமாறும் அவர் கோரினார்.

இதையடுத்து இவர்களுக்கு நியமனம் வழங்க அமைச்சர் அனுமதி வழங்கினார். (இ-3)

## கசிப்புக் காய்ச்சிய 6 பெண்கள் நீதிமன்றில்!

யாழ்ப்பாணம், நவ. 7

உரும்பிராய்ப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்ததாகத் தெரிவித்து ஆறு பெண்கள் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கசிப்பு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பானை, சட்டி மற்றும் உபகரணங்களும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன. காய்ச்சப்பட்ட நிலையில் 'இருந்த கசிப்பும்கைப்பற்றப்பட்டுநீதிமன்ற வளாகத்தில்ஊற்றப்பட்டது.

யாழ். நீதிவான் ஏ. என். இராமச்சந்திரன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சம்பந்தப்பட்ட பெண்கள் ஒவ்வொருவரும் 500 ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு நீதிவான் தீர்ப்பளித்தார். (ஐ-5)

### மாங்குளத்...

(1 ஆம் பக்கத் தொடர்)

பெரும் எண்ணிக்கையில் வந்த புலிகள் படையினர் மீது மூன்று இடங்களில் தாக்குதல்களை நடத்தினர்.

தாக்குதலின் போது மோட்டார்கள், சிறிய ஆயுதங்கள் ஆகியவற்றை அவர்கள் பயன்படுத்தினர்.

தயார் நிலையில் இருந்த படையினர் கடும் பதில்தாக்குதலை நடத்தினர்என்றும்—

பதில் தாக்குதலுக்கு பீரங்கிகளும் பயன்படுத்தப்பட்டன என்றும்—

மோதல்களின் பின்னர் தேடுதல் நடத்திய படையினர் புலிகள் விட்டுச் சென்ற இராணுவ உபகரணங்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளார்கள் என்றும்—

மோதல்களின் போதுகாயமடைந்த 9 படையினர் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-3)

### ராஜீவ்...

(1 ஆம் பக்கத் தொடர்)

நேற்று ஆரம்பமானது.

ஜெயின் குழுவின் இடைக்கால அறிக்கை இந்திய நாடாளுமன்றத்தில் குளிர்கால கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா தெரிவித்தார். (இ-3)

### ஈ.பி.டி.பி. ...

(முதலாம் பக்கத் தொடர்)

வெள்ளம் காரணமாக விழுந்ததாகவும்—

இந்த சம்பவத்தின் போது அங்கு இருந்த கிரனேட் தவறுதலாக வெடித்ததினால் தமது உறுப்பினர் சிறுகாயம் அடைந்ததாகவும் — ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## காய்ச்சலால் மரணம்

நெல்லியடி, நவ. 7

ஆறு நாள்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த வயோதிப மாது ஒருவர் கடந்தவாரம் மரணமானார். தும்பளை தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் - செல்லம் (வயது 77) என்னும் வயோதிப மாதுவே மரணமாகியவராவார். [ஐ-109)

## வீதி சேதம்

நெல்லியடி, நவ. 7

கரவெட்டி அரசடிசோனப்பு வீதி பல மாத காலமாக குன்றும் குழியுமாக காட்சி அளிக்கின்றது. இதனால் இப் பகுதியால் சைக்கிளில் செல்வோர் பெரிதும் அவதியுறுகின்றனர். (ஐ-109)

## பட்டி மன்ற இறுதி நிகழ்வு

எஸ். எம். பெர்னாண்டோ ஆதரவில் சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்திவரும் பட்டிமன்றத் தொடரின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யூனியன் கல்லூரி அணியும் மோதும். (இ-5)

## சாவகச்சேரியில் கிரனேட் வீச்சு

சாவகச்சேரி, நவ. 7

சாவகச்சேரி - கண்டி வீதியில் மடத்தடியில் நேற்று முன்தினம் பிற்பகல் 5-30 மணியளவில் படையினர் மீது கிரனேட் வீச்சு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (இ-31-)

## மூக்குக் கண்ணாடி அன்பளிப்பு

சண்டிலிப்பாய், நவ. 7

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் அண்மையில் இங்கிலாந்து மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 92 மூக்கு கண்ணாடிகளை கண்பார்வை குறைந்த, வறிய நிலையிலுள்ளவர்களுக்கு வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கில பேராசிரியர் கலாநிதி ஆர். போர்ட்டர் ஊடாக இங்கிலாந்து மக்களினால் அனுப்பி வைக்கப்பட்ட இந்த மூக்குக் கண்ணாடிகளை வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை பொறுப்பதிகாரியும், லயன்ஸ் கழக பிரமுகருமான டாக்டர் சி. சதாசிவம் வட்டு கிழக்கு கிராம அலுவலரின் துணையுடன் சித்தன்கேணியில் வைத்து உரியவர்களிடம் கையளித்தார். (ஐ-135)

### 2 தினங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பலர் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். அகதிமுகாம்களில் உள்ள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பகுதிகளில் உள்ள வயல்கள் வெள்ளத்தால் நிரம்பியுள்ளன.

அதேவேளை—வன்னியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது எனவும்—

மக்கள் பெரிதும் கஷ்டம் அனுபவிப்பதாகவும்—தெரிவிக்கப்பட்டது. (இ-31-164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07 - 11 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org